# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 56/2017**

பெயர்: **தர்மராஜ்** நாள்: 19.09.2023

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – தர்மராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 03.16</u>

சர்வே எண் 194/3ல் உள்ள நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள். சர்வே எண் 194/5ல் எனக்கு சொந்தமான நிலத்தை பட்டா செய்து கொண்டார்கள், அதற்காகவும் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 194/3ன் மொத்த விஸ்தீரணம் 14 செண்ட் ஆகும், இதற்கான பழைய சர்வே எண் 432 என்றால், சரிதான். சர்வே எண் 194/3 உள்ள நிலத்திற்கான சக்குபந்தி மேற்கு சுப்ரமணி இடமும், தெற்கே வண்டிப்பாதையும், கிழக்கே வண்டிப்பாதையும், வடக்கு காலி மனையும் உள்ளது. வாதிகளும் பிரதிவாதிகளும் பங்காளிகள் ஆவார்கள். சர்வே எண் 194/3ல் பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீடு ஒன்று உள்ளது. வீடு மற்றும் அதனை சுற்றியுள்ள காலி நிலம் அனைத்தும் பிரதிவாதிகளின் பயன்பாட்டில்தான் உள்ளது என்றால், சரியல்ல.

2) 1ம் பிரதிவாதி ரத்தினம் பெயரில்தான் குடிநீர் இணைப்பு மற்றும் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 194/3க்கு தெற்குபுறம் வண்டித்தடம் உள்ளது. அந்த தடம் மேற்குபுறமாக மாரியம்மன் கோவில் செல்கிறது. 1ம் பிரதிவாதி வீட்டிற்கு தென்புறம் பகுதியில் கிழமேலாக ஒரு வண்டித்தடம் செல்கிறது என்றால், சரியல்ல. தென்வடலாகத்தான் செல்கிறது. அந்த வண்டித்தடத்தை நான் அழித்து விட்டேன் என்று சொன்னால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.28</u>

ஒப்பம் /தர்மராஜ்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.